Deposition of witness

(Chapter XXIII Code of Civil Procedure)
In the court of Subordinate Judge, Vaniyamabdi, Vellore District.

| | |
|---|---|
| Name | S.Kulandaisamy |
| Fathers Name | A.Savarimuthu |
| Village | Kunichi |
| Taluk | Tirupattur |
| Caste | Adi Dravidar |
| Calling | Head Master |
| Religion | RC. Christian |
| Age | 51 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 24.01.2019.

## OS.170/2015 PW3 Name:Tr.Kulanthai samy

**முதல் விசாரணை**

நான் அரசு மேல்நிலைப்பள்ளி குனிச்சியில் தலைமை ஆசிரியராக பணியாற்றிவருகிறேன். இந்த் வழக்கில் செவ்வாத்தூர் புதூர் பெத்தபோயன் என்பவரதுமகன்கள் ரவிச்சந்திரன் மற்றும் சதாசிவன் ஆகியோர்கள் எங்கள் பள்ளியில் 10 ஆம் வகுப்பு படித்துவந்தது குறித்து ஆவணங்களுடன் சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்ததன்பேரில் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன். மேற்படி சதாசிவம் எங்களது பள்ளி மாற்றுச்சான்றிதழ்படி 10 ஆம் வகுப்பில் 1987-1988 வருடங்களில் படித்தார் அவருக்கு 21.06.88-ல் பள்ளி மாற்றுசான்றிதழ் வழங்கப்பட்டது. பள்ளி மாற்றுச்சான்றிதழ்படி அவரது பிறப்பு தேதி 10.05.1973 . அவரது சேர்க்கை பதிவேடு எண்.260/12.06.86. மேற்படி பி.ரவிச்சந்திரன்

என்பவர் எங்களது பள்ளி மாற்றுச்சான்றிதழ்படி 10 ஆம் வகுப்பில் 1987-1988 வருடங்களில் படித்தார் அவருக்கு 21.06.88-ல் பள்ளி மாற்றுசான்றிதழ் வழங்கப்பட்டது. பள்ளி மாற்றுச்சான்றிதழ்படி அவரது பிறப்பு தேதி 05.01.1972. அவரது சேர்க்கை பதிவேடு எண்.261/12 .06.86. மேற்படி விவரங்கள் பொருத்தான கோப்பினை நீதிமன்றத்தில் ஒப்படைக்கிறேன் மேற்படி ஆவணத்தினை எக்ஸ் .1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.

<u>1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை.,</u>

நான் மேற்படி பள்ளியில் 14.06.2018 பணியில் சேர்ந்தேன். எங்களது பள்ளியில் ஒரு மாணவனை சேர்க்க வேண்டுமென்றால் அவரது பிறப்பு சான்றை கோருவோமா என்றால் இல்லை. ஆரம்ப பள்ளியில் கொடுக்கப்பட்ட மாற்றுச்சான்றிதழின் அடிப்படையில்தான் சேர்ப்போம். தொடக்கப்பள்ளியில் மேற்படி என்ன அடிப்படையில் மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள் என்று என்னால் சரியாக சொல்லஇயலாது என்றால் ஆமாம். சாதாரணமாக பிறப்பு சான்றின் தேதியும் பள்ளி மாற்றுச்சான்றின் தேதியும் மாறுபட்டு இருக்க வாய்ப்புண்டு என்றால் வாய்ப்பு மிக குறைவு. எனக்கு தெரிந்த வகையில் 20 , 30 ஆண்டுகாலமாகத்தான் பள்ளியில்சேரும்போது பிறப்பு சான்று கட்டாயமாக்கப்பட்டுள்ளது. உறுதியாக அவ்வாறு எந்த ஆண்டு கட்டாயமாக்கப்பட்டு அறிவிப்பு வெளியிடப்பட்டதென்று என்னால் சொல்லஇயலாது.